**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**<u>காணொளிகாட்சி விசாரணை (Video Conference)</u>**
**<u>ஆணை நாள்: 04.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**<u>வழக்கு எண். SA 13560/F/2024</u>**

Dr. N. தர்மலிங்கம் ... **மனுதாரர்**

**/ எதிர் /**

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம். ... **பொது அதிகார அமைப்பு**

**<u>ஆணை</u>**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் Dr.N.தர்மலிங்கம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012 விதி 7-ன் படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.G.அண்ணாதுரை, பொதுத் தகவல் அலுவலர்/கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், மாவட்ட காவல் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 8(2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஆஜராக இயலாவிடில் அவருக்கு நிகரான பணிமூப்பில் உள்ள ஒரு அலுவலரை விசாரணைக்கு அனுப்பிவைக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யாத பொதுத் தகவல் அலுவலர் மீது இவ்வாணையம் தனது கண்டனத்தை பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 02.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திரு.வெங்கடாஜலம், RI (Traffic), புது சத்திரம் காவல் நிலையம் அவர்கள் 25.07.2024 அன்று எவ்வித சோதனை செய்யும் கருவியின்றி Witness: Nil, கார் கண்ணாடியில் ஒட்டப்பட்டு இருக்கும் filmஇன் DFT (Dry Film Thickness) பற்றி தெரிவிக்காமல் அதிகாரத்தை பயன்படுத்தி Rs.500/- Spot fine போட்டது தொடர்பான தகவல்களை 7 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 23.08.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 10.09.2024 நாளிட்ட பிரிவு 19(**1)-ன்** கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், 17.10.2024 நாளிட்ட பிரிவு **19(3)இன் கீழ்** இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரர் 30.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக தான் கோரிய அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொண்டதாக ஆணையத்திற்கு கடிதம் வழங்கியுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ந.க.எண் சி6/724/E-1063728-2025 RTI No.910/2024. 30/05/2025 நாளிட்ட கடிதம் வாயிலாக இவ்வாணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் தகவல்களைப் பெற்றுக் கொண்டதற்காக வழங்கியுள்ள கடிதத்தின் அடிப்படையில், ***இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 13560/F/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை காவல் கண்காணிப்பாளர்,
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.

**மனுதாரர் / மேல்முறையீட்டாளர்**

Dr. N. தர்மலிங்கம்,
156, மீனாட்சி நகர்,
TVS காலனி, அஸ்தம்பட்டி,
சேலம் - 636 007.

Copy to: Judgement File/ Spare.
JE / PA 04.06.2025